DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Deposition of Witness

2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் - குமாரசாமி **PW-4** வயது

த/க பெயர் தொழில்

கிராமம் தாலூக்கா

மாவட்டம்

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், காட்டூரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 15 வருடங்களாக அம்சவேணி என்பவரின் நிலத்தில் குத்தகைக்கு விவசாயம் செய்து வருகிறேன். என்னைத் தவிர குருசாமி என்பவர் அம்சவேணியின் காட்டை குத்தகைக்கு ஓட்டி வந்தார். மேற்படி குருசாமியை காடு ஓட்டுவது முதல் எனக்குத் தெரியும். நான் அம்சவேணியின் காட்டில் 3 ஏக்கர் நிலத்தில் குத்தகைக்கு விவசாயம் செய்தேன். குருசாமி 4 ஏக்கர் நிலத்தில் குத்தகை விவசாயம் செய்து வந்தார். மேற்படி குருசாமியின் தாயார் பெயர் மாரியம்மாள் என்பது தெரியும். மேற்படி மாரியம்மாளின் கணவர் பெயர் எனக்குத் தெரியாது.

2) அவர் உயிரோடு உள்ளாரா என்றால், இறந்துவிட்டதாக அவரது மகன் என்னிடம் சொன்னார். புரவிபாளையத்தில் இறந்துபோனதாக என்னிடம் சொன்னார். 15 வருடங்களுக்கு முன்பு அவர் இறந்துவிட்டதாக அவரது மகன் குருசாமி என்னிடம் சொன்னார். எனக்கு அம்மாபேட்டை போலீசார் அழைப்பாணை கொடுத்ததன்

அடிப்படையில் நான் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் அழைப்பாணை கொடுத்தபோதுதான் இந்த வழக்கு பற்றி நான் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை 2005ம் வருடத்தில் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

3) போலீசார் விசாரணையின்போது எனக்குத் தெரிந்த குருசாமி மனைவி மாரியம்மாளும், அவரது மகன் குருசாமியும் இளிப்பிளி கிராமத்தில் இருக்கும் அவர்களுக்கு சொந்தமான நிலத்தை தனது பெரியப்பா மகன்கள் பச்சைமுத்து மற்றும் அங்கமுத்து ஆகியோர் விவசாயம் செய்ய முடியாமல் தடுக்கிறார்கள் என்றும், கேட்டால் குருசாமி உயில் எழுதி வைத்திருக்கிறார் என்று அங்கமுத்து சொன்னதாகவும், இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, எனக்கும், எனது அம்மாவுக்கும் தீர்ப்பு ஆகியிருப்பதாகவும், உயில் எழுதி வைத்ததாக சொன்னது பொய் என்றும், மேற்படி உயிலை சின்னப்பகவுண்டரும், அவர் மகன்கள் பச்சமுத்து, அங்கமுத்து என்கிற தங்கராஜ் ஆகியோர் போலியாக உயில் தயார் செய்து வைத்திருப்பதாகவும், அதில் சின்னப்பகவுண்டரின் ரேகை வைத்திருப்பதாகவும், அதற்கு சாட்சியாக ஆணைக்கவுண்டனூரைச் சேர்ந்த குருசாமி, முகாசிபுதூரைச் சேர்ந்த சேமலைக்கவுண்டர் ஆகியோர் சாட்சி கையெழுத்து செய்திருப்பதாகவும், பொய் உயில் தொடர்பாக தனியாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர இருப்பதாகவும், உண்மையில் இறந்துபோன குருசாமிக்கு, அவரது மகன் குருசாமியும், அவரது மனைவி மாரியம்மாளும் தான் வாரிசுகள் என்று சாட்சியம் அளித்து விட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

4) நான் குடியிருக்கும் இடத்திற்கும், வழக்கின் 1வது சாட்சி குடியிருக்கும் இடத்திற்கும் சுமார் 1 கி.மீ தொலைவு இருக்கும். மாரியம்மாளுக்கு, பழனியம்மாள் என்ற அக்காவும், ராகினி என்ற தங்கையும் இருந்தார்கள் என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. அம்சவேணி, அவரது மகன் மற்றும் குருசாமி ஆகியோர் சேர்ந்து அம்சவேணியின் சகோதரியின் மகன் கருணாநிதியை அடித்ததாக சொல்லி சங்ககிரி நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால், நடந்ததாக சொன்னார்கள். அந்த சமயத்தில் நானும், குருசாமியும், அம்சவேணியின் நிலத்தை ஓட்டி வந்தோம், அந்த வகையில் எனக்குத் தெரியும். மேற்படி அம்சவேணி நிலத்தை குத்தகைக்கு ஓட்டிய குருசாமியும், இந்த வழக்கில் புகார் கொடுத்திருக்கும் குருசாமியும் ஒருவர்தான் என்றால், சரிதான். குருசாமியின் அப்பா இறந்த விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றாலும், எந்த சமயத்தில் இறந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றாலும், சரிதான். எனக்கு குருசாமியின் தந்தை இறந்த விவரங்களை குருசாமி சொன்னதாக அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**